## மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபை – 2017

---

மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, உரிமை மூலதனங்கள் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 50 ஆம் இலக்க மீயுயர் நீதிமன்றத் தொகுதி முகாமைத்துவச் சபை அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று சபையின் மார்ஷல் அவர்களிற்கு 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களை (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) பின்தொடர்ந்து இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்குரிய மின் உயர்த்தி பராமரிப்பு செலவினம் ரூபா 851,443 தெகை மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் மிகை அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக வாடகைக்கு வழங்கப்படாத கட்டிடங்களுக்காக கட்டிட வாடகையாக இரண்டு நிறுவனங்களுக்குரிய ரூபா 2,220,000 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) சிறுவர் நீதிமன்றத்திற்காக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த கட்டிடத்திற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 2,375,000 தொகையான வாடகை வருமானம் மீளாய்வாண்டின் வருமானமொன்றாக கணக்கீடு செய்த காரணத்தினால் மிகை அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது,

(ஈ) மீளாய்வாண்டின் போது மூலதன மானியமாக திறைசேரியிடமிருந்து ரூபா 17.30 மில்லியன் கிடைத்திருந்த போதிலும் சபையின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 16.30 மில்லியனாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய ரூபா 301,800 ஆன மீதி ரூபா 466,054 என குறித்த கடன்கொடுத்தோரால் உறுதிப்படுத்தியிருந்ததுடன் அதன் பிரகாரம் ரூபா 164,254 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 15,378,215 கூட்டுத்தொகையான நானாவிதக் கடன்பட்டோர் மீதியில் ரூபா 11,136,325 அதாவது 72 சதவீதம் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டன.

## 2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 19 ஆம் பிரிவு மற்றும் 2007 ஒக்தோபர் 02 ஆந் திகதிய பீஈடீ45 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவ சபையினால் பொறுப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கூற்றொன்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவையின் நிதிப்பிரமாணம் 625(1)(அ) | சீன அரசாங்கத்தின் உதவியின் மூலம் அமுல்படுத்தப்பட்ட மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் பேணுகை செயற்திட்டத்தின் மூலம் 2016 ஆம் ஆண்டின் போது சுங்கக் கட்டணம் செலுத்தி இறக்குமதி செய்யப்பட்டிருந்த ரூபா 7,970,000 பெறுமதியான பொருட்கள் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2007 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய எம்ஓஎப்பீ/ஈஆர்டீ/2007/2 ஆம் இலக்க நிதி திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை மற்றும் 1994 ஏப்ரல் 20 ஆந் திகதி | அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அனைத்து வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்களும் முறைப்படியாக சான்றுறுதிப்படுத்திய வருடாந்த கணக்குகளை தொடர்ந்துவரும் நிதியாண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், சீன அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் யுவான் 22,180,000 செலவிடப்பட்டிருந்த மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் பேணுகை செயற்திட்டத்தின் கணக்குகள் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் 14 நாட்குறிப்புக்கள் மூலம் முன்னைய ஆண்டிற்குரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக முகாமை சபையின் முறையான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்படாதிருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 13,738,357 ஆன மிகையொன்றானதுடன், அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 17,667,347 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 3,928,990 பின்னடைவொன்றை காண முடிந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக பதவியணியினர் செலவினம் ரூபா 1,728,259 ஆலும் நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு செலவினம் ரூபா 1,043,995 ஆலும் ஏனைய செயற்பாட்டுச் செலவினம் ரூபா 624,060 ஆலும் அதிகரித்தமை மேற்படி பின்னடைவிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்கையில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 18,392,274 தொகையான பற்றாக்குறை 2014 ஆம் ஆண்டு முதல் மிகையொன்றை காண்பித்திருந்ததுடன் அது 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 13,738,357 ஆக இருந்தது. ஊழியர் வேதனங்கள் மற்றும் அரசாங்கத்திற்குச் செலுத்திய வரிகள் என்பவற்றைக் கருத்திலெடுத்த பின்னர் 2013 ஆம் ஆண்டில் பங்களிப்பு ரூபா 32,429,080 ஆன பெறுமதியை எடுத்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அது ரூபா 91,318,242 நேர் பெறுமதியொன்றை எடுத்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடும் மீளாய்வும்

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

மீளாய்வாண்டின் போது இயந்திர பொறிகள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் ஏழு செயற்திட்டங்களுக்காக ரூபா 13 மில்லியன் வருடாந்த நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இரண்டு செயற்திட்டங்களுக்கு ரூபா 2.4 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எஞ்சிய 05 செயற்திட்டங்கள் எந்தவொரு பௌதீக மற்றும் நிதி செயலாற்றலென்றை காண்பிக்காதிருந்ததுடன் ரூபா 8.75 மில்லியன் மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களுக்கு புறம்பாக பயன்படுத்தப்பட்டிருந்தன.

### 4.2 பதவியணியினர் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 177 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறான பதவியணினர் 152 ஆக இருந்தது. அதன் பிரகாரம் 25 பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உத்தியோகத்தரொருவருக்கு கூடுதலாக செலுத்திய சம்பளம் மற்றும் வழங்கப்பட்டுள்ள முற்பணங்களிலிருந்து 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 191,919 தொகை அறவிட வேண்டியதாக காணப்பட்ட போதும் இந்நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் ரூபா 90,425 ஆன பணிக்கொடை தொகை மற்றும் அதற்குரிய ரூபா 18,085 ஆன மிகை கட்டணத்தையும் கொடுப்பனவு செய்வதற்கு 2017 நவம்பர் 16 ஆந் திகதி நடைபெற்ற முகாமைத்துவ சபைக்கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது,

## 05. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 “நிகழ்ச்சிநிரலின்” பிரகாரம், ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், மீளாய்வாண்டில் மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபையினால் தமது விடயப் பரப்பின் கீழ் வரும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்படுத்துவது தொடர்பாக அறிந்திருந்ததன் பேரில் சபையினால் தனது விடயப் பரப்பின் பிரகாரம் அடைந்து கொள்ள வேண்டிய நோக்கம் இனங்காணப்பட்டிருந்தது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2013 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 யூன் 12 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தினால் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்படாமல் இருந்ததுடன் நீதி அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலமும் மீளாய்வாண்டில் உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக 17 செலவின விடயங்களுக்காக பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே 34 சதவீதம் முதல் 120 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் காணப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சபையின் மார்ஷல் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| வருமான நிர்வாகம் | எழுத்துருவிலான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடாது சபையின் சில கட்டிடங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தமை, கைச்சாத்திட்டிருந்த வாடகை உடன்படிக்கைகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்காமை, வாடகை கட்டிடங்களிலிருந்து வெளியேறியிருந்த நிறுவனங்களிற்கும் வாடகை பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை, நிலுவை வாடகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |